கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஏப்ரல் மாதம் 08ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.62/2020
* * * *

சீராளன் (எ) முகமது வகாப் ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

மகாலிங்கம் (எ) முகமது உசேன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இறுதியாக இம்மனுவானது 01.04.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1.1) இம்மனுவானது கடந்த 25.07.1999ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்திற்கு உரிய முத்திரை கட்டணமும் தண்டத்தொகையும் செலுத்த அனுமதிக்க வேண்டி இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 35ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

1.2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், I.A.No.3/2025ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இம்மனுவிலும் எதிருரையாக பாவித்துக்கொள்ளவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணமாக இருப்பதால் அதனை சாட்சியமாக பயன்படுத்த முடியாது என்றும், அதனால் இம்மனுவினை அனுமதிக்க கூடாது என்று கூறி எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்</u>**

இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

2.1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவில், மனுதாரர்/வாதியின் தம்பியான இந்நிர் எதிர்மனுதாரரும் மற்றும் அவரது மகனான அப்துல் ராஜீத் ஆகியோர் வழக்கு சொத்து தொடர்பாக 25.07.1999ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை வாதிக்கு ஆதரவாக எழுதிக்கொடுத்தாகவும், இந்நிலையில், மேற்படி ஆவணமானது பதிவு செய்யப்படாததை கூறிப்பிட்டு இந்நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதி மேற்படி ஆவணத்தை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவித்த காரணத்தால் மேற்படி ஆவணத்திற்கான உரிய முத்திரை கட்டணமும் தண்டத்தொகையும் செலுத்த அனுமதிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2.2) இந்நிலையில், கீழ்க்கண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாண்பமை ஆந்திரா உயர்நீதிமன்ற முன்தீர்ப்புகளான

**1. Deivanai vs Muthu (A) Velayudham**
**CRP PD(MD) Nos.9 & 10 2021**
**and**
**CMP (MD) No.91 of 2021**

**2.Peddina Subba Rao Vs Peedina Prasad**
**CRP No.3310 of 2019**

.... ஆகிய முன்தீர்ப்புகளில் பதிவு செய்யப்படாத மற்றும் உரிய முத்திரை கட்டணம் செலுத்தப்படாத பரிவர்த்தனை பத்திரம் குறித்த வழக்குகளாக உள்ளது. மேற்படி வழக்குகளில் பதிவு செய்யப்படாத மற்றும் முத்திரை கட்டணம் இல்லாத ஆவணங்களை உரிய முத்திரை கட்டணம் மற்றும் உரிய தண்டத்தொகை பெற்று வழக்கு விசாரணைக்கு Collateral purposeக்காக சாட்சியமாக பரிசீலனை செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

2.3) மனுவில் தாக்கல் செய்யப்பட்ட 25.07.1999ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத மற்றும் உரிய முத்திரை கட்டணம் செலுத்தப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணமானது வழக்குச்சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட ஆவணமாக உள்ளது. மேலும்,

**Navinraj vs Gnanasekar and others**
**[2017(2) MWN (Civil) 165]**

...என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் முன்தீர்ப்பின் பத்தி 32ல்

... "Thus at the admission stage itself, the Court cannot refuse to admit the document merely because objections have been raised by the parties. Further, after collecting stamp duty and penalty, if any, the Court can note the objections including whether for a collateral purpose such document could looked into or not and defer its conlusions thereon to the judgement stage." என்று கூறப்பட்டுள்ளது.

2.4) மேற்படி பதிவு செய்யப்படாத பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணமானது இவ்வழக்கு சாட்சிய பரிசீலனைக்கு உகந்ததா என்பதை இறுதி விசாரணையில் தான் தீர்மானிக்க இயலும் என்பதை கருத்தில் கொண்டும், உரிய முத்திரை கட்டணம் செலுத்த அனுமதிப்பதால் மட்டுமே அந்த ஆவணம் வழக்கு பரிசீலினைக்கு உகந்த ஆவணம் என்று தீர்மானிக்க இயலாது.

2.5) மேலும், பதிவு செய்யப்படாத மற்றும் உரிய முத்திரைகட்டணம் செலுத்தப்படாத ஆவணங்களை பொறுத்து இந்திய முத்திரைச்சட்ட பிரிவு 35ன் கீழ் உரிய முத்திரை கட்டணம் தண்டத்தொகையுடன் செலுத்த அனுமதிப்பது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே மேற்படியான முன்தீர்ப்புகளின் வழிகாட்டுதலை பின்பற்றி இம்மனுவில் கூறப்பட்டுள்ள 25.07.1999ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத

தானசெட்டில்மெண்ட் பத்திரத்திற்கான உரிய முத்திரை கட்டணம் தண்டத்தொகையுடன் செலுத்த அனுமதிப்பது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 08.04.2025ம் தேதியன்று இந்த திறந்த நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.04.08 17:26:51 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**1. மனுதாரர் தரப்பு சாட்சி:–** இல்லை
**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை
**3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:–** இல்லை
**4. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.04.08 17:26:57 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.62/2020
வரைவு/ செவ்வை உத்தரவு
நாள்: 08.04.2025